# புதுமுக இரண்டாம் ஆண்டு நீல வரைபடம்

| | பாட வேளை | அறிதல் | | | புரிதல் | | | வெளியிடல் | | | உயர்வரிசை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | |
| பா நடை | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | |
| 1. வாழ்த்து | 3 | 1(1) | | | | 1(2) | | | | | | | | **2(3)** |
| 2. சங்க இலக்கியம் | 4 | 1(1) | | 1(2) | | | | 1(1) | | | | | | **3(4)** |
| 3. அற இலக்கியம் | 5 | 1(1) | | 1(4) | | | | | | | | | | **2(5)** |
| 4. காப்பியம் | 15 | 1(1) | 1(2) | 1(3) | | | 1(4) | | | 1(4) | | | | **5(14)** |
| 5 சிற்றிலக்கியம் | 3 | 1(1) | | | | | | 1(1) | | | 1(1) | | | **3(3)** |
| 6. மறுமலர்ச்சிப் பாடல்கள் | 11 | 1(1) | 1(2) | | | | 1(4) | | | 1(4) | | | | **4(11)** |
| 7. வழிபாட்டுப் பாடல்கள் | 4 | 1(1) | | | 1(1) | | | 1(1) | | | 1(1) | | | **4(4)** |
| உரைநடை | | | | | | | | | | | | | | |
| 1. கவிதை கிழக்கும் மேற்கும் | 4 | 1(1) | | | | 1(2) | | 1(1) | | | | | | **3(4)** |
| 2. சமூக சீர்திருத்த சிந்தனையாளர்கள் | 5 | | | | 1(1) | | | | | 1(4) | | | | **2(5)** |
| 3. ஒலி மாசு | 3 | 1(1) | | | | 1(2) | | | | | | | | **2(3)** |
| 4. பெண் கல்வி | 4 | | | | | | | | | 1(4) | | | | **1(4)** |
| 5. தமிழர் வளர்த்த அழகு கலைகள் | 5 | 1(1) | | | | | 1(4) | | | | | | | **2(5)** |
| 6. தமிழகமும் நிலமும் | 5 | | | 1(3) | 1(1) | | | | | | | | | **3(5)** |
| 7. கருநாடகத்தில் பக்தி இயக்கம் | 5 | 1(1) | | | 1(1) | | 1(3) | | | | | | | **3(5)** |
| 8. உயர்ந்த ரகம் | 3 | | 1(2) | | | | | | | | | | | **1(2)** |
| புறநடை | | | | | | | | | | | | | | |
| 1. யோஷிகி | 4 | | | 1(4) | | | | | | | | | | **1(4)** |
| 2. சிற்பியின் நரகம் | 3 | | 1(2) | | | | | | | | | | | **1(2)** |
| 3.சுய நலம் | 4 | | | | | | 1(4) | | | | | | | **1(4)** |
| 4. புகைச்சல் | 4 | 1(1) | | | | | | | | 1(3) | | | | **2(4)** |
| 5. மாத்திரை | 3 | | | | | | 1(3) | | | | | | | **1(3)** |
| 6. செம்மானின் கங்கை | 3 | | 1(2) | | | 1(1)* | | | | | | | | **1(3)** |
| 7. மாஞ்சாணத்தி மலை | 3 | 1(1) | | | | | | 1(1) | | | | | | **2(2)** |

| | பாட வேளை | அறிதல் | | | புரிதல் | | | வெளியிடல் | | | உயர்வரிசை | | | மாத்தப |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வி னா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வி னா | புற வினா | குறு வி னா | சிறு வி னா | புற வி னா | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | |
| அணி | 4 | | | | | | | | | 1(4) | | | 1(4) | **2(8)** |
| கட்டுரை | 5 | | | | | | | | | 5* | | | 1(5) | **2(5)** |
| கடிதம் | 4 | | | | | | | | | | | | 1(4) | **1(4)** |
| மொழி பெயர்ப்பு | 4 | | | | | | | | | 1(4) | | | | **1(4)** |
| மொத்தம் | **120** | **13(13)** | **5(10)** | **5(16)** | **4(4)** | **4(7)** | **6(22)** | **6(6)** | **-** | **7(27)** | **2(2)** | **-** | **3(13)** | **55(120)** |

## SUBJECT - TAMIL - 04 BLUEPRINT FOR THE MODEL QUESTION PAPER 2024-2025

## BLUE PRINT - 2nd PUC MODEL QUESTION PAPER - 02

| PART | QUESTION TYPE | NUMBER OF QUESTIONS | MARKS |
|---|---|---|---|
| 1 | OBJECTIVE TYPE ANSWER | 20/20 | 20 |
| 2 | SHORT ANSWERS | 5/8 | 10 |
| 3 | ANNOTATION | 9/6 | 9 |
| 4 | LONG ANSWER HOTS | 5/8 | 20 |
| 5 | GRAMMAR | 4/7 | 8 |
| 6 | அணி | 1/2 | 4 |
| 7 | ESSAY | 1/2 | 5 |
| 8 | LETTER (OR) TRANSLATE | 1/2 | 4 |
| **Total** | | **55** | **80** |

**Government of Karnataka**

# Karnataka School Evaluation and Assessment Board (KSEAB)

Model Question Paper – 02

**SUBJECT CODE: 04 - TAMIL**

II PUC (2024 – 2025)

[Total number of Questions: 49]

**Time: 3 hours 15 minutes** **Max Marks: 80**

மாணவர்களின் கவனத்திற்கு:

1. கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக எழுத வேண்டும்
3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

பகுதி - ஒன்று

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 10 x 1 = 10

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடைகளையும் சேர்த்து எழுதுக

1. 1949 ல் முதல் தமிழக அரசவைக் கவிஞராக விளங்கியவர்____________

(அ) இராமலிங்கம் பிள்ளை

(ஆ) புலவர் குழந்தை

(இ) முத்தையா

(ஈ) பாரதியார்

2. வயலும் வயல் சார்ந்த பகுதியையும் வைத்துப் பாடப்படும் பாடல் ____________

(அ) குறிஞ்சி

(ஆ) முல்லை

(இ) மருதம்

(ஈ) நெய்தல்

3. சிறுபஞ்ச மூலம் நூலின் ஆசிரியர் ____________

(அ) நல்லாதனார்

(ஆ) காரியாசான்

(இ) வெண்ணிக் குயத்தியார்

(ஈ.) சீத்தலைச் சாத்தனார்.

4. வஞ்சி மாநகரில் யாருடைய படிமம் எழுப்பப்பட்டிருந்தது ____________

(அ) கோவலன்

(ஆ) மணிமேகலை

(இ) பாண்டிய மன்னன்

(ஈ) கண்ணகி

5. கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்த ஊர் ____________
(அ) தேரூர்
(ஆ) கீழக்கரை
(இ) தூத்துக்குடி
(ஈ) பெரியகுளம்

6. மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம்’ ம இவ்விரண்டு நூல்களை இயற்றியவர் ____________
(அ) திருத்தக்க தேவர்
(ஆ) இராமலிங்க அடிகளார்
(இ) எ.ஆ. கிருஷ்ண பிள்ளை
(ஈ) கவிஞர் வைரமுத்து

7. பெரியார் காந்திஜியை பெங்களூரில் எந்த ஆண்டு சந்தித்தார் _________
(அ) 1927
(ஆ) 1979
(இ) 1947
(ஈ) 1929

8. ' நாய்ஸ்' என்னும் ஆங்கிலச் சொல் எந்த மூலச் சொல்லில் இருந்து வந்தது _________
(அ) கிரேக்
(ஆ) நாசியா
(இ) பிரெஞ்சு
(ஈ) சமஸ்கிருதம்.

9. யோஷிகி சிறுகதையில் மணிக்கு நூற்று நாற்பது மைல் வேகத்தில் செல்லும் ரெயிலின் பெயர் _________
(அ) ஹிங்கன்சென்
(ஆ) நோசோமி (Nozomi)
(இ) ஹிக்காரி
(ஈ) மிசுஹோ (Mizuho)

10 மஞ்சானத்தி மலை சிறுகதையில் மிளகு காடு எங்கு இருந்தது _________
(அ) கேரளா
(ஆ) தமிழ் நாடு
(இ) ஆந்திரா
(ஈ) கர்நாடகா.

II. கோடிட்ட இடங்களைச் சரியான விடையைக் கொண்டு நிரப்புக: - 5×1=5

11. கழனி என்பதன் பொருள் _________ (வயல்/காடு)
12. வெள்ளத்தனைய _________நீட்டம். (உயர்வு / மலர்).
13. கம்பராமாயணம் எத்தனைக் காண்டங்களைக் கொண்டது _________ (ஆறு /பத்து)
14. மொழி இன எல்லைகளைக் கடந்த மனித மகா காவியம் _________ ( திரிகடுகம் / திருக்குறள்)
15. சரசுவின் மகன் பெயர் _________ (கணேசன் / முருகேசன்)

III பொருத்துக 5×1=5

16 (அ) திரிகடுகம் (i) திருவள்ளுவர்

(ஆ) மணிமேகலை (ii) கம்பர்

(இ) கம்பராமாயணம் (iii) புலவர் குழந்தை

(ஈ) திருக்குறள் (iv) சீத்தலைச் சாத்தனார்

(உ) இராவண காவியம் (v) நல்லாதனார்

(vi) அம்மூவனார்.

## பகுதி - இரண்டு.

### பிரிவு -1

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 2 =4

17. நாம் எதைப் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார்?

18. வெண்ணிப் பறந்தலைப் போர் எந்த இரு அரசர்களுக்கிடையே நடைபெற்றது?

19. சீதை தீயில் புகுந்ததைக் கம்பர் எவ்வாறு வர்ணிக்கிறார்?

### பிரிவு-2

(ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:- 2 x 2=4

20. சாவுக்கே எதிர் முழக்கம் கிடும் ஷெல்லியின் கவிதை வரிகளை எழுதுக.

21. போக்குவரத்து இரைச்சல் எவ்வாறு வரிக்குதிரையையும், சிட்டுக் குருவியையும் பாதிக்கின்றது?

22 'குல் குல் பசந்த்' செய்யும் முறையைப் பற்றிக் குப்புசாமி கூறியவற்றை எழுதுக .

### பிரிவு-3

(இ) ஏதேனும் ஒன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 1 x 2 = 2

23. புதுமைப்பித்தன் சிற்பி சாத்தனின் தோற்றப் பொலிவு பற்றிக் கூறுவன யாவை?

24. செம்மானின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு நடந்து கொண்டிருந்தது?

## பகுதி - மூன்று

எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள்

விளக்கம் எழுதுக. 3 x 3=9

25. “அலைகிடந்தன ஆழி கிடந்தென

நிலை கிடந்தது உடல் நிலத்தே"

26. "கன்னி இளமயிலைக்

காதலுடன் வரவேற்போம்”

27. சென்னையைச் சேர்ந்த கடற்கரையில் பல குப்பங்கள் உண்டு.

28. “உடலே ஆலயம், தொழிலே கைலாசம்”

29. ஆசையா வாழ்ந்த பொண்டாட்டி மதிக்க மாட்டேங்கிறா?

30 “மாத்திரை என்றால் உருண்டையாய், தட்டையாய் கசப்பாய்த்தான் இருக்க வேணுமா என்ன?”

பகுதி - நான்கு

பிரிவு-1

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 4 = 8

31. ஒப்புரவறிதல் குறித்துத் திருவள்ளுவர் கூறுவனவற்றை விவரி.

32. இராமன் சீதையைக் கடிந்துரைத்தவை யாவை?

33 ‘இளமையில் கல்' கவிதையின் மூலம் கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக .

பிரிவு - 2

(ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 2 x 4=8

34. அம்பேத்கரின் அறிவுத்தாகம் பற்றிய செய்திகளை விவரி.

35. வள்ளுவனை எம்மதத்தாரும் தம் மதத்தவன் என்று போற்றுவதற்கான காரணங்களாக ஜீவா கூறுவன யாவை?

36. சோழர் காலத்து ஓவியங்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக .

பிரிவு-3

(இ) ஏதேனும் ஒன்றனுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக. 1 × 4=4

37 இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன் என்று ஜானகிராமன் கூறியதும் ஹோட்டல் பணியாள் கூறியவற்றை விவரி.

38. கட்டில் தொழில் வல்ல வேலப்பன் நாளடைவில் இருந்த இடம் தெரியாமல் போனதற்கான காரணங்களை எழுதுக.

பகுதி – ஐந்து

பிரிவு -1

(அ) கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக 1×4=4

39 (அ) சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்

பட்டுப்பா டூன்றும் களிறு.

(அல்லது).

39 (ஆ) “நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை

ஏய்ந்த தன் கோயிலே எய்து வாளெனப்

பாய்ந்தனள்.”

பிரிவு -2

(ஆ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. 4 x 2 = 8

40. சேர்த்தெழுதுக

1. இளமை + கதிர்

2. பச்சை+ புறாக்கள்.

41. பிரித் தெழுதுக

1. ஆடிப்பாடி

2. இழிவுற்றாலும்

4.2. இலக்கணக் குறிப்பு தருக

1. விரிகடல்

2. முந்நீர்

43. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக

1. நேத்து டி.வி. சீரியல் நல்லா இல்லே

2. இன்னைக்கு பத்து மணிக்கு இண்டர்வியூ நடக்குது

44. சொற்களின் பொருள் வேறுபாடு உணர்ந்து வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக. ( கல், கள்)

1. மலையைக் _______என்று சொல்லலாம்

2. தேனைக் ______என்று சொல்லலாம்

45. அடைப்பிற்குள் கேட்டவாறு வாக்கியங்களை மாற்றி எழுதுக.

1. அறம் செய்யும்படி ஔவையார் கூறினார். (ஏவல்)

2. சாலை விதிகளைக் கவனி ! (செய்தித் தொடர்பு)

46. வல்லெழுத்து மிகும் இடங்கள் (உரிச்சொற்களில் வல்லினம் மிகுதல்)

1. சால + சிறந்தது

2. தவ+ பெரிது

பகுதி - ஆறு

பிரிவு -1

(அ) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக - 1 x 5 = 5

47. (அ) 'மாணவர்களும் இணையதளமும்' குறித்து கட்டுரை வடிவில் எழுதுக.

(அல்லது).

(ஆ) 'உன்னைக் கவர்ந்த ஒரு நூல்' குறித்து உன் பார்வையில் கட்டுரை வடிவில் எழுதுக

பிரிவு -2

(ஆ) கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக. 1×4=4

48. நீ வசிக்கும் பகுதியில் சாலை வசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் வரைக

(அல்லது)

49. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளை தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.

1. Money makes many things.
2. Work is worship
3. Union is strength
4. Look before you leap